**மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், மேட்டூர்**
**முன்னிலை:திரு.எஸ்.பிரின்ஸ் சாமுவேல் ராஜ், பி.ஏ., எல்.எல்.எம்.,**
**மாவட்ட உரிமையியல் நீதிபதி, மேட்டூர்**
**2020 ஆம் ஆண்டு மார்ச் மாதம் 04 ஆம் நாள் புதன்கிழமை**
**இ.ம.எண்.01/2019**
**அ.வ.எண்.27/2015**

1. வெள்ளையம்மாள்
2. பெரிய கவுண்டர் (இறந்துவிட்டார்)
3. பெருமாயி
4. சந்திரசேகர் (எ) சந்திரசேகரன்
5. குணசேகரன் ...மனுதாரர்கள்/வாதிகள்

/எதிராக/

1. இந்திராணி
2. அருள்
3. கவிதா ...எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகள்

இம்மனு கடந்த 18.02.2020 ஆம் தேதியன்று இந்நீதிமன்றம் முன்பாக இறுதியான விசாரணைக்கு வரப்பட்டு மனுதாரர்கள்/வாதிகள் தரப்பில் வழக்கறிஞர் திரு.ஆர்.பி.அண்ணாமலை அவர்கள் ஆஜராகியும், எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகள் தரப்பில் வழக்கறிஞர் திருமதி.ஜி.மாலதி அவர்கள் ஆஜராகியும், இருதரப்பு வாதுரை கேட்கப்பட்டும், வழக்கு ஆவணங்கள் பரிசீலனை செய்தும் இதுநாள் வரை ஆய்வில் இருந்து வந்து மேற்படி இம்மனுவில் இந்நீதிமன்றம் வழங்கிடும்.

## உத்தரவு

இம்மனு உரிமையியல் நடைமுறைச்சட்டம் பிரிவு 151 ன் கீழ் அ.வ.எண்.27/2015 மற்றும் அ.வ.எண்.122/2015 ஆகியவற்றை ஒன்றாக விசாரிக்க அனுமதி கோரி மனுதாரர்களால் தாக்கல் செய்யப்பட்ட மனுவாகும்.

**1) மனுப்பிரமாணப் பத்திரிக்கையின் சுருக்கம் : -**

மனுதாரர்கள் இவ்வழக்கினை விளம்புகை மற்றும் நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் கோரி தாக்கல் செய்துள்ளனர். 4 ம்மனுதாரரின் தகப்பனார் 01.09.2018 ல் வழக்கு சொத்து குறித்து மனுதாரர்களுக்கு உயில் ஆவணம் எழுதி வைத்துள்ளார். அதனை ஒப்புக் கொள்ளாத எதிர்மனுதாரர்கள் அ.வ.எண்.122/2015 ஐ தாக்கல் செய்து அதில் மேற்படி உயில் செல்லாது எனவும், விளம்புகை பரிகாரமும் கோரியுள்ளார்கள். இரண்டு வழக்கிலுள்ள தரப்பினர்கள் மற்றும் சொத்துகள் மற்றும் பிரச்னை அனைத்தும் ஒன்றாகும். ஆகவே அ.வ.எண்.27/2015 மற்றும் அ.வ.எண்.122/2015 ஆகியவற்றை ஒன்றாக விசாரிக்க அனுமதி கோரிமனுதாரர்கள் இம்மனுவினை தாக்கல் செய்துள்ளார்கள்.

**<u>2) 1ம்எதிர்மனுதாரரால் தாக்கல் செய்யப்பட்டு மற்ற எதிர்மனுதாரர்களால் ஏற்றுகொள்ளப்பட்ட எதிருரையின் சுருக்கம்:</u>**

மனுதாரர்களின் மனு பொய். சட்டப்படிக்கும், சங்கதிகளின் படிக்கும் நிலைக்கத்தக்கதல்ல. 01.09.2008 ல் மனுதாரர்களுக்கு ஆதரவாக உயில் எழுதி வைத்ததாக கூறுவது பொய்யாகும். அ.வ.எண்.122/2015 ல் அந்த உயில் செல்லாது என பரிகாரம் கோரியுள்ளது உண்மையாகும். ஆனால் தரப்பினர்கள் சொத்துகள் ஆகிய இரண்டு வழக்குகளிலும் ஒன்று என கூறுவது தவறு. தரப்பினர்கள் ஒன்று என்றாலும், சொத்துகள் வெவ்வேறானதாகும். ஆகவே கூட்டாக விசாரணை செய்தால் இருதரப்பினர்களும் மிகுந்த சிரமங்கள் ஏற்படும். எனவே மனுவினை தள்ளுபடி செய்ய வேண்டுமென எதிர்மனுதாரர்கள் கூறியுள்ளார்கள்.

3) இருதரப்பு கற்றறிந்த வழக்குரைஞர்களின் மதிப்பிற்குரிய வாதங்கள் கேட்கப்பட்டன. ஆவணங்கள் பரிசீலனை செய்யப்பட்டன. மனுதாரர்கள் மற்றும் எதிர்மனுதாரர்கள் தரப்பில் வாய்மொழிச் சாட்சியங்களோ, ஆவணச் சாட்சியங்களோ எதுவும் முன்னிலைப்படுத்தப்படவில்லை.

**<u>4) பிரச்சினை :-</u>**

இம்மனு அனுமதிக்கத்தக்கதா என்பதே ஆகும்.

**<u>5) பிரச்சினைக்கான தீர்வு</u>**

(i) மனுதாரர்கள் தரப்பில் மனுதாரர்கள் இவ்வழக்கினை விளம்புகை மற்றும் நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் கோரி தாக்கல் செய்துள்ளனர் எனவும், 4ம்மனுதாரரின் தகப்பனார் 01.09.2018 ல் வழக்கு சொத்து குறித்து மனுதாரர்களுக்கு உயில் ஆவணம் எழுதி வைத்துள்ளார் எனவும், அதனை ஒப்புக் கொள்ளாத எதிர்மனுதாரர்கள் அ.வ.எண்.122/2015 ஐ தாக்கல் செய்து அதில் மேற்படி உயில் செல்லாது எனவும், விளம்புகை பரிகாரமும் கோரியுள்ளார்கள் எனவும், இரண்டு வழக்கிலுள்ள தரப்பினர்கள் மற்றும் சொத்துகள் மற்றும் பிரச்னை அனைத்தும் ஒன்று எனவும், ஆகவே அ.வ.எண்.27/2015 மற்றும் அ.வ.எண்.122/2015 ஆகியவற்றை ஒன்றாக விசாரிக்க அனுமதி கோரி மனுதாரர்கள் இம்மனுவினை தாக்கல் செய்துள்ளது தெரிய வருகிறது.

(ii) எதிர்மனுதாரர்கள் தரப்பில் 01.09.2008 ல் மனுதாரர்களுக்கு ஆதரவாக உயில் எழுதி வைத்ததாக கூறுவது பொய் எனவும், அ.வ.எண்.122/2015 ல் அந்த உயில் செல்லாது என பரிகாரம் கோரியுள்ளது உண்மை எனவும், ஆனால் தரப்பினர்கள் சொத்துகள் ஆகிய இரண்டு வழக்குகளிலும் ஒன்று என கூறுவது தவறு எனவும், தரப்பினர்கள் ஒன்று என்றாலும், சொத்துகள் வெவ்வேறானது எனவும், ஆகவே கூட்டாக விசாரணை செய்தால் இருதரப்பினர்களும் மிகுந்த சிரமங்கள் ஏற்படும் எனவும், எனவே மனுவினை தள்ளுபடி செய்ய வேண்டுமென எதிர்மனுதாரர்கள் கட்சி செய்துள்ளது தெரிய வருகிறது.

(iii) இருதரப்பிலும் இருவழக்குகளிலும் ஒரே தரப்பினர்கள் என்பதை ஒப்புக் கொண்டுள்ளனர். ஆனால் எதிர்மனுதாரர் தரப்பில் சொத்துவிபரங்கள் வெவ்வேறு என கட்சி செய்யப்பட்டுள்ளது தெரியவருகிறது. இந்நிலையில் அ.வ.எண்.122/2015 ன் வழக்குரையை இவ்வழக்கில் முன்னிலைப்படுத்தாத போதும் மேற்படி வழக்கு இந்நீதிமன்றத்தில் நிலுவையில் உள்ளதால் அதன் வழக்குரை பரிசீலனை செய்யப்பட்டது. மேற்படி வழக்கில் ச.எண்.356/7 ஏ -வில் ஒரு ஏக்கர் நிலம் குறித்து விளம்புகை பரிகாரமும், 01.09.2008 தேதியிட்ட சண்முகத்தால் எழுதிக் கொடுக்கப்பட்ட உயில் செல்லாது என பரிகாரம் கோரியுள்ளது தெரியவருகிறது. இந்நிலையில் இவ்வழக்கில் மேற்படி உயில் செல்லும் என கூறி மேற்படி சர்வே எண்ணின் உட்பிரிவுகளான 356/7 ஏ 2, 356/7 ஏ 4, 356/7 ஏ 8 ஆகியவை குறித்தும், 356/5 சி குறித்தும் தாக்கல் செய்துள்ளது தெரியவருகிறது. ஆகவே 2 வழக்குகளிலும் ஒரே உயில் குறித்து தீர்மானிக்க வேண்டியுள்ளதாலும், மேற்படி இரண்டு சொத்துவிபரங்களும் ஒன்று என்பதாலும், இரண்டு வழக்குகளையும் ஒன்றாக விசாரித்தால் தான் மாறுபட்ட தீர்ப்பினை தவிர்க்க முடியும் என்பதால் இரண்டு வழக்குகளையும் ஒன்றாக விசாரிக்க உத்தரவிடுவது நீதிக்கு உகந்தது என முடிவு செய்து இம்மனு அனுமதிக்கத்தக்கது என இந்நீதிமன்றம் தீர்மானிக்கிறது. மேலும் இவ்வழக்கில் சாட்சியங்களை பதிவு செய்ய வேண்டுமெனவும் உத்தரவிடப்படுகிறது.

முடிவாக மனு அனுமதிக்கப்படுகிறது. இவ்வழக்குடன் அ.வ.எண்.122/2015 யை ஒன்றான விசாரிக்க வேண்டுமெனவும், அ.வ.எண்.27/2015 ல் சாட்சியம் பதிவு செய்ய வேண்டுமெனவும் உத்தரவிடப்படுகிறது.

இந்த உத்தரவு என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் கணிணியில் தட்டச்சு செய்யப்பட்டு, என்னால் பிழைநீக்கம் செய்யப்பட்டு 2020 ஆம் ஆண்டு மார்ச் மாதம் 04 ஆம் நாள் இந்த திறந்த நீதிமன்றத்தில் என்னால் அவையறியப் பகரப்பட்டது.

**ஒப்பம்/-திரு.எஸ்.பிரின்ஸ் சாமுவேல் ராஜ்,**
**மாவட்ட உரிமையியல் நீதிபதி,**
**மேட்டூர்.**

மனுதாரர்கள் தரப்பு சாட்சிகள் மற்றும் சான்றாவணங்கள்:- இல்லை

எதிர்மனுதாரர்கள் தரப்பு சாட்சிகள் மற்றும் சான்றாவணங்கள்:- இல்லை

**ஒப்பம்/-திரு.எஸ்.பிரின்ஸ் சாமுவேல் ராஜ்,**
**மாவட்ட உரிமையியல் நீதிபதி,**
**மேட்டூர்.**